REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 4உ புதன் (18—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 5உ வியாழன் (19—5—55) [இதழ் 288

கடலுக்குள் அணுகுண்டு சோதனை

அமெரிக்காவின் மேற்குக் கரையோரத்திற்கப்பால், கடல் தண்ணீருக்குள் சிறிய அணுகுண்டு ஒன்றை அமெரிக்கா வெடித்ததாம்! கடலுக்குள் அணுகுண்டு வெடிக்கும் பரிசோதனையில் இது இரண்டாவது சோதனை என்று கூறப்படுகிறது.

முதல் பரிசோதனை பசிபிக் கடலில் எப்போது நடத்தப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை.

இந்த சோதனையினால் அமெரிக்காவிலோ அல்லது அருகில் உள்ள தீவுகளில் வசிப்பவர்களுக்கோ அல்லது கடல் மீன் உண்பவருக்கோ எவ்விதத் தீங்கும் இல்லையாம். நீர் மூழ்கிக் கப்பல் எதிர்ப்புமுறை பற்றியே இந்த சோதனைகள் நடத்தப்பட்டது.

வங்காளிகளுக்கு எதிராகக் கடையடைப்பு!

கல்கத்தா பத்திரிகைகளை வாங்குவதற்குத் தடை

தங்கள் விஷயத்தில் தலையிடக் கூடாது என வங்க முதலமைச்சருக்கு எச்சரிக்கை

வங்காளிகளுக்கு எதிராக அசாமியர் போர்க்கோலம்

கௌஹாதி, மே 17—

நகரிலுள்ள சிறுசிறு கடைகளும், தொழில் நிலையங்களும் இன்று மூடிக்கிடந்தன; சிற்சில உணவு விடுதிகளும், மருந்துக் கடைகளும் நீங்கலாக பெரும் தொழில் நிலையங்கள் அனைத்தும் கதவடைத்திருந்தன. திறந்து வைக்கப்பட்டிருந்த இரண்டொரு வியாபார நிலையங்களிலும் குறைந்த எண்ணிக்கை ஊழியர்களே பணி புரிந்தனர்.

கல்விக்கூடங்கள் அனைத்தும் மூடிக்கிடந்தன. அரசாங்க அலுவலகங்கள் மட்டும் வழக்கம்போல் வேலை செய்தன.

கலகங்கள் ஏற்படும் நேரவண்ணம் முச்சந்திகளில் எல்லாம் போலீஸ் படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். முக்கிய வீதிகள்தோறும் போலீஸ்படை வேவு பார்த்துக்கொண்டிருந்தது.

அசாம் மாநிலத்தைச் சேர்ந்த கோல்பாரா மாவட்டத்தில் வங்காளிகள் ஆதிக்கம் வலுத்து வருவதை எதிர்த்து, ஏற்கனவே அசாமியர் கிளர்ச்சி செய்துள்ளனர். அக்கிளர்ச்சி, அசாம் காங்கிரசின் முழு பலத்துடன் நடைபெறுகிறது என்பது, வங்காள காங்கிரஸ் தலைவர், முதலமைச்சர் ஆகியவர்களின் குற்றச்சாட்டாகும்.

கோல்பாராவில் வங்காளிகளுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு இன்னும் தணிந்துவிடவில்லை; மேலும் வளர்ந்துகொண்டே வருகிறது.

தனி நபர்களின் பெயர் எதுவும் குறிப்பிடாமல், 'கௌஹாத்தி பொது மக்கள்' என்ற பெயரில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கோல்பாரா கலவரத்தின்போது கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் கிராமவாசிகளை உடனடியாக விடுவிக்கும்படியும், எங்கெங்கு 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் அதை நீக்கும்படியும், குறிப்பிட்ட சில கல்கத்தா பத்திரிகைகளை வாங்காமலிருக்கும்படியும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அசாம் மாநிலம் முழுதும் கடையடைப்புச் செய்யவேண்டுமெனவும், முதல் மந்திரி ராயும், வங்காள காங்கிரஸ் தலைவர் கோஷும், அசாம் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாது என எச்சரிக்கப்பட்டும் இருக்கிறது.

அவர் தரும் உறுதிமொழி

ஈரோடு, மே 16—

"விவசாயப் பொருட்களின் விலை வீழ்ச்சி காரணமாக கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை மாநில மத்திய அரசாங்கங்கள் நன்கு அறிந்தே இருக்கின்றன. அவர்கள் நிலைமை மோசமாகாமல் பார்த்துக்கொள்வதாக ஏற்கனவே உறுதி மொழி அளித்திருக்கின்றனர்,"

என்று சென்னை கவர்னர் பிரகாசா பங்களாபுதூரில் விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சர்க்கார் உத்தியோகங்களுக்கு

பல்கலைக் கழகப் பட்டம் தேவையா?

சர்க்கார் உத்தியோகங்களுக்கு பல்கலைக் கழக பட்டம் வேண்டுமா என்பது பற்றி ஆராய்வதற்காக சர். ஏ. இராமசாமி அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, இதுபற்றி தனிப்பட்டவர்கள், பல்வேறு நிறுவனங்களின் கருத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தி சாகித்திய சம்மேளனத்தவரின் ஆதிக்க வெறிக் கூச்சல்!

தவணையையே நீடிக்கக்கூடாதாம்

பாக்காபாத், மே 17—

ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தியை அரசாங்க மொழியாக்குவதற்காக அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 15 ஆண்டு கால வரையறையை நீடிக்க வேண்டும் என்று தென்னாட்டில் நடைபெறும் கிளர்ச்சியைக் கண்டித்து இந்தி சாகித்திய சம்மேளனம் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருப்பதாகத் தெரிய வருகிறது.

தென்னாட்டுக் கோரிக்கை விவேகமற்றது என்றும், அதை மக்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்றும் அத்தீர்மானம் கூறுகிறதாம்.

இந்தத் தீர்மானத்தை புருஷோத்தம தாஸ் தாண்டன் ஆதரித்தாராம்.

இந்தி குழு நியமிக்கப்பட்டிருப்பதை வரவேற்றும், அந்தக் குழுவில் இந்தி பேசுவோரின் பிரதிநிதிகளை அதிகமாகச் சேர்க்க வேண்டும் எனக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று தெரிய வருகிறது.

என்ன காரணமோ?

புதுடில்லி, மே. 17—

பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலியின் இரண்டாம் மனைவியான அலியா சாதி, நேற்று காலை 'குவீன்ஸ்வே'யிலுள்ள மத்திய கைத்தொழில் விற்பனை நிலையத்தில் மயக்கமுற்றார் என்று செய்தி வந்துள்ளது.

அலுவலக ஊழியர்கள் அவர் உதவிக்கு விரைந்தசென்றனராம்.

மயக்கம் தெளிந்ததும் திருமதி அலி ஒவ்வொரு சிப்பந்திக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டாராம்.

கடந்த ஒரு வார காலமாக, திருமதி அலி, சாமான்கள் வாங்குவதற்காக கடைகளுக்குச் சென்று மிகவும் சோர்ந்து போய்விட்டதாகக் கூறப்பட்டது.

'காஷ்மீர் இளவரசி'யை வீழ்த்தியது சியாங்கின் இரகசிய ஏஜெண்டுகளாம்!

சீனப் பிரதமர் தரும் தகவல்

லண்டன், மே 16—

சீன தேசிய மக்கள் காங்கிரசின் நிரந்தரக் குழுவில் பேசிய சீனப் பிரதமர் சௌ-யென்-லாய், பாண்டுங் மாநாட்டிற்கு இந்திய விமானத்தில் சீனக் குழுவினர் செல்லுகையில், சியாங்-கே-ஷேக்கின் இரகசிய ஏஜெண்டுகளால் கொல்லப்பட்டதாக அறிவித்தாராம்!

"அந்தத் தியாகிகளுக்கு நமது ஆழ்ந்த வருத்தத்தையும், அவர்களது குடும்பத்தாருக்கு அனுதாபத்தையும் நாம் தெரிவித்துக் கொள்கிறோம்," என்றும் அவர் குறிப்பிட்டாராம்!

பிரிட்டனில் தேர்தல்

630 இடங்களுக்கு 1,409 பேர் போட்டி

பிரிட்டனில் மே. 26-ந் தேதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் 630 இடங்களுக்கு 1,409 பேர் போட்டியிடுகின்றனர் என்றும், அவர்கள் எல்லோரும் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும் தெரிகிறது.

அகாலிதளத்தினர் கிளர்ச்சியை ஒடுக்கக் கூட்டு முயற்சி!

பெப்சு - பஞ்சாப் முதலமைச்சர்கள் சந்திப்பு

சாந்திகார், மே 17—

மொழி அடிப்படையில் பஞ்சாப் மாநிலத்தைத் திருத்தி அமைக்கும் நோக்குடன் அகாலிதளத்தைச் சேர்ந்த சீக்கியர்கள் மேற்கொண்டுவரும் நேரடி நடவடிக்கையை ஒடுக்க பஞ்சாப் முதலமைச்சரும், பெப்சு முதலமைச்சரும் கலந்து ஆலோசித்தனர். ஒரு மணி நேரம்வரை மேற்படி ஆலோசனை நடைபெற்றுள்ளது.

பஞ்சாபில் அகாலி தளத்தினர் கையாண்டு வரும் நேரடி நடவடிக்கையில் கலந்து கொள்ள பெப்சுவிலிருக்கும் அகாலி தளத்தைச் சேர்ந்தவர்கள் முயற்சித்து வருவதாக சொல்லப்படுகிறது.

அகாலியர் கிளர்ச்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் குறித்து பஞ்சாப் அமைச்சர் குழு நேற்று ஆராய்ந்தது.

மேலும் இரண்டு அகாலிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதுவரை, மேற்படி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பவர் எண்ணிக்கை 63 எனவும் தெரியவருகிறது.

மத்திய சமூக நல போர்டு 1954 ஆகஸ்டு 15-ந் தேதியன்று ஆரம்பித்துவைத்த க்ஷேமநல விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், இப்போது 200 திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கவிதை உருவில் ஒரு பெண்ணின் மண விலக்கு மனு!

திரும்பப் பெற நீதிபதி கட்டளை

பரோடா மகாராணி

மணவிலக்கு கோருகிறார்

பாரிஸ், மே. 16—

பரோடா மகாராணியான சீதாதேவி என்பவர், நீதி மன்றம் ஒன்றில் தனது கணவரான முன்னாள் பரோடா மன்னர் பிரதாப் சிங் என்பவரிடமிருந்து மணவிலக்கு செய்துகொள்ள அனுமதி தரும்படி கோரியுள்ளதாகத் தெரிகிறது.

அந்த மகாராணியுடன் அவரது வழக்கறிஞரும் வந்திருந்தார் எனத் தெரிய வருகிறது.

இருவரும் நீதி மன்றத் தலைவர் சார்ல்ஸ் பார்னட் என்பாரைச் சந்தித்து சில நிமிட நேரம் உரையாடினர் என்றும், முன்னாள் மன்னரும் தனது வழக்கறிஞருடன் வந்து நீதி மன்றத் தலைவரை சந்தித்ததாகவும் தெரிய வருகிறது.

தனக்கு மணவிலக்கு அளிக்குமாறு, பியூனஸ் அயர்ஸ் நீதிபதியிடம் ஒரு பெண் மனு ஒன்றைக் கொடுத்தார்.

அம்மனுவை, சாதாரண வழக்கப்படி உரை நடையில் எழுதாமல் கவிதை வடிவில் தீட்டி இருந்தார் அப்பெண்!

கவிதை மனுவைக் கண்ட நீதிபதி, மனுவைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியும், மூன்று தினத்திற்குள் வழக்கமான உரை நடையில் மணவிலக்குக் கோரிக்கையைக் குறிப்பிட்டு மனு கொடுக்கும்படியும் கட்டளை பிறப்பித்தார்.

பஞ்சாபில் மூன்று புதிய தொழிற்சாலைகள்

ரூ. 6½ கோடி செலவில் துவங்கும்

சாந்திகாரில் ஒரு ரயான் தொழிற்சாலையையும், ஆந்திரா 'டைப் ரைட்டர்' உற்பத்திசாலையையும் அமைக்க பஞ்சாப் சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தனிப்பட்ட நபர்களால் இந்த இரு தொழிற்சாலைகளும் நடத்தப்படும் என்றும், ரயான் தொழிற்சாலை ரூ. 4 கோடி செலவிலும், 'டைப்ரைட்டர்' தொழிற்சாலை ரூ. 50 லட்சம் செலவிலும் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.

சாந்திகாருக்கு அருகில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை அமைக்கவும் சர்க்கார் முடிவு செய்திருப்பதாயும், இதற்கு ரூ. 2 கோடி செலவாகக் கூடுமென்றும் தெரிய வருகிறது.

பிறரைகொல்ல வைத்த குண்டுக்கு தானே பலி!

ஒரு பயங்கரவாதியின் பரிதாப முடிவு!

கசாபிளாங்காவிற்குத் தென்கிழக்கே 175-கல் தொலைவில் உள்ள பேனி மேலால் என்ற ஊரில், ஒரு ருசிகரமான சம்பவம் நடைபெற்று இருக்கிறது.

அங்கு, சாலை ஓரத்தில் 'பஸ்' ஒன்று பொதுமக்கள் வருகைக்காகக் காத்திருந்தது. ஒரு பயங்கரவாதி அந்த 'பஸ்'ஸில் ஒரு வெடிகுண்டை வைத்துவிட்டுக் கீழிறங்க முயன்றார்; அதற்குள், அக்குண்டு வெடித்து விடவே, பிறரைக் கொல்ல வைத்த குண்டுக்கு அவரே பலியாக வேண்டியதாகி விட்டது.

அதே நேரத்தில் 'பஸ்'ஸில் இருந்த ஒரு ஆளுக்கும் எந்தவிதக் காயமும் ஏற்படவில்லை.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18–5–'55 புதன்

ஆச்சாரியார் அணிவகுப்பு!

தன்னைப் பற்றி அதிகமாக மதிப்பிட்டுக் கொண்டிருக்கிறவர்களில், நாம் அறிந்தவரையில், சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களே முன்னணியில் இருப்பவர் ஆவார். தன்னையும் ஓர் அறிஞர்களில் பேரறிஞராக அவர் எண்ணிக்கொள்வதோடு நின்றிருப்பாரானால், நாம் அவர் அவ்வாறு நினைப்பதைத் தவறு எனக் கூறவோ, தகாதது எனச் சொல்லவோ முன்வரப்போவது கிடையாது. ஆனால், ஆச்சாரியார் நினைப்பும, போக்கும் அவ்வழியில் அமைந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. எனவே, நாமும், தன்னைப் பற்றி அவர் கருதிக் கொண்டுள்ள ஆகாத நினைப்பையும், அந்த நினைப்பினடியாக அவர் வெளியிட்டுவரும் 'கட்டளை'களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாகிறோம்.

ஆச்சாரியார், தன்னை ஓர் அறிவாளியாகத் தீர்மானித்துச் செயலாற்றுவதோடு மட்டுமே நிற்பது கிடையாது. உலகில் உள்ள மற்றவர்களுக்கு வழிகாட்டியாக நின்று, தவறான வழியில் செல்வதிலிருந்து அவர்களைத் தடுத்து நிறுத்தி, வேறு ஒரு நேரிய பாதையைக் காட்ட, தான் மட்டுமே பிறந்திருப்பதாக மனப்பால் குடித்துக்கொண்டிருப்பவர் ஆச்சாரியார். தான் பணிக்க, மற்றவர் அதை மேற்கொண்டு ஒழுகக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற இறுமாப்புக் குணம் எப்படியோ ஆச்சாரியாரிடம் இடம் பெற்றுவிட்டிருக்கிறது.

தான் பிறந்த வீட்டில் உறைந்து போய் இருக்கிற பெருநோய்க்கு ஆச்சாரியார் பலியாகிக் கிடக்கிறார். அதுவுமன்றி, அவரிடத்தில் பற்றுக் கொண்டிருக்கிறவர்களும், அவரை ஓர் சிறந்த அறிவாளியாகக் கொள்ளுவதோடு மட்டும் மனச்சாந்தி பெறாது, அவரை ஓர் மகானாகவும் உயர்த்திக் கூறிவிட்டார்கள். எனவே சீடர்களின் புகழ் மாலை, தன்னையும் ஓர் மகானாகக் கருதி நடக்குமாறு ஆச்சாரியாரை ஆக்கிவிட்டது.

இவ்வுண்மையை மெய்ப்பிப்பதற்கு, புதிய கல்வித் திட்டத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பின்போது, ஆச்சாரியார் கூறிய ஆணவ மொழிகளே போதிய சான்றுகளாகும். மக்களாட்சி முறையின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்சி அமைப்பில் அதிகாரத்திற்கு வந்துள்ள ஒருவர் பதில் கூறும் முறையில், புதிய கல்வித் திட்ட எதிர்ப்புக்கு அன்று முதல் அமைச்சராக இருந்த ஆச்சாரியார் ஒன்றும் பதில் கூறினது கிடையாது. 'கடவுளின் ஏகப்பிரதிநிதி நான்; எனவே என் ஏவல் வழி அடங்கிக் கிடக்கவேண்டியவர்கள் குடிமக்கள்' என்ற மத்திய கால மன்னர்களின் மனப்போக்குக் கொண்டு பேசி வந்தவர் ஆச்சாரியார். அதுவுமன்றி, மதத் தலைவர்களின் 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்ற நினைப்பிலும் ஆச்சாரியார் எதிர்ப்பை அலட்சியப்படுத்தி வந்திருப்பவராவார்.

ஆச்சாரியார் பிறவிக் குணமான அந்த மனப்போக்கு, அணுகுண்டு ஒழிப்பு விவகாரத்திலும் அவரை, உபதேசியார் நிலைக்கு உயர்த்திவிட்டிருக்கிறது. ஆரம்பத்திலேயே அவருடைய உபதேசியார் பிணிக்கு மருந்திட கூட்டுத் தோழர்கள் முனைந்திருந்தால், இன்று மற்றவர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் உபதேசங்களைச் செய்யும் அளவிற்குத் துணிவு ஏற்பட விடாது, ஏற்கனவே அவரைத் தடுத்திருக்கலாம். கூட்டுத் தோழர்கள் அப்பொழுது செய்யத் தவறினதின் பயனை இப்பொழுது அனுபவிக்கிறார்கள்.

தொடர்ந்து அணுகுண்டு பரீட்சையில் ஈடுபடுவதை உடனடியாக அமெரிக்கா கைவிட்டுவிட வேண்டுமென ஆச்சாரியார் அமெரிக்க ஏட்டிற்கு கட்டுரை தீட்டினார். அவரை இன்றுள்ள உச்சநிலைக்குத் தூக்கிவிட்ட ஏடுகளும், அக்கட்டுரையை, அதிகப்படியாக விளம்பரப்படுத்தின.

ஆச்சாரியார் சொல்லை—இல்லை—உபதேசத்தை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே ஆச்சாரியாருக்குச் சீற்றம் பிறந்துவிட்டது.

மேலும் மேலும் அணுகுண்டு பரீட்சையைத் தொடர்ந்து செய்துவரும் அமெரிக்காவிடமிருந்து ஒரு சல்லி அளவு உதவியும் இந்தியா பெறக்கூடாது எனும் அறநெறி போதனையை ஆச்சாரியார் திருவாய்மலர்ந்தருளினார். அதற்கு, இந்தியப் பேரரசின் சார்பில் நிதி அமைச்சர் தேஷ்முக்கும், பிரதமர் நேருவின் சார்பில் வி. கே. மேனனும் விளக்கமாக பதில் கூறிவிட்டார்கள். இருந்தாலும் ஆச்சாரியார் விடாப்பிடியாக, தனது உபதேசத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

ஆச்சாரியாரின் 'அருள் வாக்கு' அறநெறித்துறை பற்றினதாகும். அணுகுண்டைக் காரணம் காட்டி, அமெரிக்காவிடமிருந்து எந்தச் சிறு உதவியும் இந்தியா பெறக்கூடாது என்று ஆச்சாரியார் அறிவிக்கும் அறநெறி சாரத்தை மேலும் சில விவகாரத்திலும் செலுத்திப் பார்க்கவேண்டும். அப்படி பார்க்கப் புகுவது தர்க்கரீதியாகத் தவறுடையதாகாது. அதுதான் முறையும், கொள்ளத்தக்கதுமாகும்.

அணுகுண்டு பரீட்சையை மேற்கொண்டு இருப்பது அமெரிக்கா மட்டுமல்ல. சோவியத் ரஷ்யாவும் அப்பரீட்சையில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இங்கிலாந்தும், பிரான்சும் அவ்வழியில் முயற்சித்து வருகின்றன. ஆச்சாரியாரின் அறநெறிச் சாரத்தின்படி, மேற் குறிப்பிட்டுள்ள எந்த ஒரு நாட்டினிடமிருந்தும் எந்தவிதச் சிறு உதவியும் இந்தியா பெறக்கூடாது. இக்கருத்தை ஆச்சாரியார் கூறவில்லை. ஆனால், அவருடைய 'அருள் வாக்கு' அதுவகையிலும் செல்லுபடியாகக் கூடியதேயாகும்.

மிருக பலத்தை, அதாவது பலாத்காரத்தை அறவே அகற்றி அகிம்சை முறையில் காங்கிரஸ் இயங்கி வந்திருப்பதாகச் சொல்லப்பட்டு வருகிறது. மிருக பலத்தையும் புறங்காணக்கூடிய ஆற்றல் ஆத்ம பலத்திற்கு உண்டு என்பது காந்தியக் கோட்பாடு. குறிப்பிட்ட ஒரு தூய்மையான இலட்சியத்தைத் தூய்மையான சாதனத்தால்தான் பெறவேண்டும் என்பது காந்திய தத்துவம். சாதனம் தூய்மையற்றதாக இருக்குமானால் அதனால்பெறப்படும் இலட்சியமும், தூய்மையற்றதாகவே இருக்கும் என்பது காந்திய தத்துவத்தின் அடிப்படை விளக்கம்.

இவ்வுயர்ந்த காந்தியத் தத்துவம், எந்த அளவு இந்தியப் பேரரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது ஆராயத்தக்கது. அதுவுமன்றி, ஆச்சாரியார் அதிகாரத்திலிருந்தகாலை, மேற்குறிப்பிட்ட காந்திய உயர் தத்துவத்திற்கு எந்த அளவு மதிப்பு கொடுத்து நடந்துகொண்டார் என்பதும் சிந்திக்கத்தக்கது.

அதிகாரத்தில் இருந்தகாலை ஆச்சாரியார் மேற்கூறிய காந்திய முறையை, மூச்சுத் திணறடித்துக் கொல்வதிலேயே அக்கரைகாட்டி வந்திருக்கிறார். ஆயுத பலத்தை ஆச்சாரியார் நம்பி வாழ்ந்த அளவு, வேறு காங்கிரஸ் அமைச்சர்கள் வாழவில்லை என்றே திட்டவட்டமாகக் கூறலாம். அத்தகு அருங்குணம் படைத்த ஆச்சாரியார் தான்; இன்று புதுவகை அறநெறி போதனையில் ஈடுபட்டு வருகிறார்.

ஆச்சாரியாரின் அரசியல் நடைமுறை தெரிந்தவர்கள், அவருடைய உபதேசத்தில், யாரையோ விகாரப்படுத்தும் அரசியல் விஷ வாடை வீசுவதையே காண்பர். தொடர்புள்ளவர்கள், ஆச்சாரியாரைக் குட்டியுமிருக்கிறார்கள்; இனி பலமாகக் குட்டவும் செய்வர். அது நமது பணியன்று!

மீசை நரைத்தும் ஆசை நரைக்கவில்லை?

வயது முதிர்ந்த கிழவர் ஒருவர், இளம் பெண்மணி ஒருவரை மணக்கவிருந்த திருமண நிகழ்ச்சி ஒன்றை ஆமதாபாத்திலுள்ள சமூக நல ஊழியர்கள் தடுத்து நிறுத்திவிட்டனராம்!

இந்தச் சம்பவம், மேகான மாவட்டத்தைச் சேர்ந்த விசாநகர் எனும் கிராமத்தில் நடைபெற்றதாம்.

ஆமதாபாத்தைச் சேர்ந்த ஒரு வியாபாரியான அந்தக் 'கிழ மணமகனு'க்கு வயது 50 என்றும், மணமகளுக்கு 15 வயது என்றும், இளம் பெண்ணை மணந்துகொள்ளக் கூடாது என்று, பலர் அவரை வற்புறுத்தியும், கிழவனார் இசையாமல் திருமணத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் 'துரித'மாகச் செய்துமுடித்துக்கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

பின்னர், கிழவனாரிடம் எவ்வளவு சொல்லியும் பலன் பெறாத பெண் சமூக ஊழியர்கள் திரும்பி வந்து, மணமகளின் வீட்டிற்கு முன்னர் சத்தியாக்கிரகம் நடத்தி, மணமகன் குழுவினரை 'வெற்றிகரமா'கத் திருப்பி அனுப்பினராம்!

1954 மே 10-ந் தேதி வெளியிடப்பட்ட தேசீயத் திட்ட சர்டிபிகேட்டுகளை 4 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாங்கினார்கள். அந்த சர்டிபிகேட்டுகள் மூலம் வசூலான மொத்த தொகை ரூ. 7,05,00,000 ஆகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

தேவையான பொருள் வசதி கிடைக்குமா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நகல் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி தேவையான சேமிப்பும், முதலீடும் இந்திய அரசாங்கத்தினால் ஜனநாயக வழிகளிலேயே பெறக்கூடியது தானா என்ற பிரச்சினை குறித்து திட்டத்தைத் தயாரித்தவர்களும், மத்திய அரசாங்க அதிகாரிகளும் பரிசீலனை செய்து கொண்டிருக்கையில், பேராசிரியர் ஷெனாய் என்ற பொருளாதார நிபுணர் 'அத்தகைய சேமிப்புகளையும், முதலீடுகளையும் இந்தியாவால் பெற முடியாது,' என்று கூறியிருக்கிறார்.

"நகல் திட்டத்தில் காணப்படுவதைக் காட்டிலும் மிக அதிகமான அளவு வெளிநாட்டு உதவி கிடைத்தாலன்றி, திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான பொருளாதாரம் கிடைப்பது கடினம்—முடியாது,"

என அவர் கூறியிருக்கிறார்.

மண் வளம் குறையாதிருக்க!

உதகமண்டலம், மே 16—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், 1,93,800 ஏகருக்கு மேற்பட்ட பிரதேசங்களில் ரூ. 248.86 லட்சம் செலவில், 'பூசார'த்தை (மரங்கள் வெட்டப்படுவதால் ஏற்படும் நிலவளக் குறைவுகளைத் தவிர்ப்பது) பாதுகாக்க சர்க்கார் திட்டங்கள் தயாரித்துள்ளதென சென்னை மாநில விவசாய அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

மத்திய 'பூசார'க் குழு இதற்காக ரூ 1.25 கோடி கடனாகத்தர ஒப்புதல் தந்துள்ளதாகவும், நீலகிரியில் உள்ள வெள்ளாமைப் பிரதேசம் முழுமைக்கும் ஆறாண்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐதராபாத் நிசாமின் உபதேசம்!

மைந்தர்களுக்கு அறிவுரை

ஐதராபாத், மே 15—

"மன்னராக இருந்தாலும் சரி, அல்லது இளவரசராக இருந்தாலும் சரி, இந்த 'ஜனநாயக யுகத்'திற்கு ஏற்றபடி தான் அவர்கள் நடந்து கொள்ள வேண்டும்,"

என்று ஐதராபாத் நிசாம், தனது பிள்ளைகளுக்கு 'இடித்துக்' கூறியிருக்கிறாராம்!

நிசாமினுடைய இரண்டு பிள்ளைகளும் இன்னும் தங்கள் பழைய 'நிலையிலே'யே நடந்துகொள்கின்றனராம். செலவுகளை அளவுக்கு மீறி செய்வது—பொறுப்பற்ற முறையில் டாம்பீகமான வாழ்க்கை நடத்துவது ஆகியவைகளைக் கொஞ்சங்கூட அவர்கள் விட்டொழிக்கவில்லையாம்!

இந்தப் போக்கை எதிர்க்கும் வகையிலேயே—அவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளவேண்டுமென்ற கருத்துடன்—அவர்களுக்குப் புத்தி புகட்டும் வகையிலேயே—அவர்களது தகப்பனாரான நிசாம், 'ஷிராஸ்' எனும் பத்திரிகையில் கட்டுரை ஒன்றின் மூலமாக மேற்கண்டவாறு குறிப்பிட்டு சுட்டிக்காட்டியிருக்கிறாராம்!

மேலும் அவர், "இனிமேல் அவர்கள் வாங்கும் கடன்களுக்கு நான் பொறுப்பாளியல்ல" என்றும் தெரிவித்துவிட்டாராம்!

மைசூரின் பங்கும் அவ்வளவுதான்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மைசூர் மாநிலத்தின் பங்கு ரூ. 100 கோடியாக இருக்குமென்று இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச நகல் திட்டங்கள் மூலம் தெரியவருகிறது.

இந்திய சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக மொத்தமாகச் செலவிட இருக்கும் தொகை ரூ 5,000 கோடி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'பிராவிடண்ட்' நிதி

முக்கூட்டுத் தொழிலாளர் மாநாடு முடிவு

பம்பாய், மே 16—

இந்தியா முழுமையிலும் 10,000 பேர் ஈடுபட்டுள்ள எல்லா தொழில்களிலும் 'பிராவிடண்ட்' நிதி வசதி செய்துதர வேண்டுமென்று கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற முக்கூட்டுத் தொழிலாளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்தத் திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொண்டால், இரசாயனம், தீக்குச்சித் தொழில், உணவுப் பொருட்களின் வகையைச் சேர்ந்த எண்ணெய்கள், தேயிலைத் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், சுத்திகரிப்பு நிலையங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள், மோட்டார் வண்டிகளை பழுது பார்க்கும் நிலையங்கள், இன்னும் இவை போன்ற தொழிற்சாலைகளுக்கெல்லாம் இந்த 'பிராவிடண்ட்' நிதி சட்டம் விரிவுபடுத்தப்படும்.

இத்திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிற அதே காலத்தில் இதற்கென ஊதிய நிர்ணயக் குழு ஒன்றையும் சர்க்கார் நியமித்தாக வேண்டும்.

மாநாட்டில் கலந்து கொண்ட தொழிலாளர் தலைவர்கள், மேற்கண்ட அந்த நியமனத்தை ஊதிய நிர்ணயக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும்—என்பதை வலியுறுத்தியிருக்கின்றனர்.

தீர்மானங்களின் முதல் பிரிவில் கூறப்பட்டுள்ள எல்லா வகைத் தொழில்களுக்கும், அடுத்த ஆண்டு 1956 மார்ச் 31-ந் தேதிக்குள்ளாகவாவது குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்துவிட முயற்சி எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

மேலும் இளந்தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத்தர இன்ஸ்பெக்டர்கள் தங்கள் கண்காணிப்பைத் தீவிரமாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

14 வயதிற்குக் குறைந்த சிறுவர்களை விவசாயத் தொழில் தவிர்த்த மற்றத் துறைகளில் வேலை செய்ய அனுமதிக்கக் கூடாதெனவும், வேலை நேரம், ஓய்வு, வாராந்திர விடுமுறை, இரவுக் கால வேலைத் தடுப்பு ஆகியவைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது.

'அகண்ட டெல்லி' அமைக்கக் கோரிக்கை

புதுடில்லி, மே. 17—

"'ஏ' 'சி' பிரிவு பாகலங்களிடையே நிலவும் பாகுபாடுகளை அகற்ற சர்க்கார் முயற்சிக்க வேண்டும்;

"டெல்லி மாநிலத்தின் இப்போதைய உருவை, அருகில் உள்ள பல பகுதிகளையும் சேர்த்து பெரிதாக ஆக்க வேண்டும்; ஏனெனில், அப்போதுதான், மக்களின் ஜனநாயக, கலாச்சார தொடர்புகளைக் கொண்ட பெரிய அகண்ட டெல்லி அமைக்க முடியும்,"

என்று, பஞ்சாப், மேற்கு உத்தர பிரதேசம், டெல்லி ஆகிய மாநிலங்களிலிருந்து வந்திருந்த பல சட்டசபை உறுப்பினர்கள் கலந்துகொண்ட மாநாடு ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

விவசாய அபிவிருத்திக்கு ரூ. 260 கோடி

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் 'பெருமை' விரிகிறது

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூ 650 கோடி செலவாகுமாம். இதற்கான பிரரேபணைகள் மத்திய உணவு, விவசாய அமைச்சர் காரியாலயத்தில் தயாராக இருக்கிறதாம்.

ஒவ்வொருவரின் தினசரி உணவிலுள்ள 'கலோரி' அளவை 1,800-லிருந்து 2,250 ஆகவும், நபர் ஒன்றுக்குத் தற்போது கிடைத்துவரும் 15 கெஜம் வீதம் கிடைக்கும் துணியின் அளவை 1960-61-ல் 20 கெஜமாகவும் உயர்த்துவதற்கு இந்தப் பிரரேபணைகள் வழிவகைகள் காணுமாம்.

தற்போதைய திட்டத்தில் விவசாய உற்பத்தி, நிலமீட்சி, நிலப் பாதுகாப்பு போன்ற 20 முக்கிய அம்சங்கள் சம்பந்தமான பிரரேபணைகள், மத்திய சர்க்காரே நேரடியாகச் செலவிட்டு நடத்தும் திட்டங்கள்—மத்திய சர்க்காரிடமிருந்து நிதி, இதர உதவிகளுடன் மாநில சர்க்கார்கள் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள்—மாநில சர்க்கார்களே முழுச் செலவையும் ஏற்று நடத்திவைக்கவேண்டிய திட்டங்கள் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் திட்டங்களுக்கு ரூ 43 கோடி தேவைப்படும். கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்குத் தேவைபடும் மொத்தத் தொகையான ரூ 515 கோடியில் ரூ 405 கோடியை மத்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ளுமாம். மீதி ரூ. 110 கோடியையும் மாநில சர்க்கார்களே தங்கள் பங்காகக் கொடுக்கவேண்டியிருக்கும்.

உணவு தானியங்கள், சணல், பருத்திபோன்ற அத்தியாவசியப் பொருட்களில் ஏற்பட்டிருந்த கடுமையான பற்றுக்குறையை நிவர்த்தி செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட முதல் திட்டம் 'வெற்றிகரமா'க நிறைவேறி வருவதால், தேசீய வருமானத்தை அதிகரிக்கவும், மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் ஏற்ற வழியில் பொருளாதார அபிவிருத்தியை உண்டாக்குவது என்ற அம்சங்களுக்கு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறதாம்!

அபிவிருத்திச் செலவுகளின் சில புள்ளிவிவரம்

கிடங்கு வசதி, கடன் வசதி, கூட்டுறவு வளர்ச்சிக்கு முதலாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டது ரூ. 22 கோடி—இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 40 கோடி;

பால் பண்ணைகள் போன்றவற்றின் அபிவிருத்திக்கு முதலாவது திட்டத்தில் ரூ. 60 லட்சம்—இரண்டாவது திட்டத்தில் ரூ. 20 கோடி;

காடுகள் அபிவிருத்திக்கு முதல் திட்டத்தில் ரூ. 76 லட்சம்—இரண்டாவது திட்டத்தில் ரூ. 16·6 கோடி;

நிலமற்ற தொழிலாளர் புனர் வாழ்வமைப்பிற்கு முதல் திட்டத்தில் ரூ. 15 கோடி—இரண்டாவது திட்டத்தில் ரூ 50 கோடி;

இவை தவிர, இரண்டாவது திட்டத்தில் மீன் துறை அபிவிருத்திக்காக ரூ 3.8 கோடியும், விவசாய ஆராய்ச்சிக்கு ரூ. 11 6 கோடியும், கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சிக்கு ரூ. 9 4 கோடியும், விவசாயப் பொருட்கள் விற்பனை ஏற்பாட்டிற்கு ரூ 2 8 கோடியும் ஒதுக்கப்பட இருக்கின்றனவாம்.

விவசாய உற்பத்தியில் தற்போது இருந்துவரும் குறியீட்டெண் 113-ஐ, 1960-61-ல், 135 ஆக உயர்த்துவதற்காக ரூ. 161 கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்குமாம்; இது, முதலாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட ரூ. 50 கோடி அதிகமாகும்.

1960—61-ல், சிறு தானியங்கள், பயிறுவகைகள் ஆகியவற்றின் இலட்சிய உற்பத்தி அளவு முறையே 635 லட்சம் டன்களாகவும் 115 லட்சம் டன்களாகவும் உயர்த்தப்படும்போது வயது வந்த ஒவ்வொருவருக்கும் 15 5 அவுன்ஸ் சிறு தானியங்களும், 2.8 அவுன்ஸ் பயிறுவகைகளும் கிடைக்கும்.

இதுபோலவே இரண்டாவது திட்ட இறுதியில் சர்க்கரை, எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் இலட்சிய உற்பத்தி அளவு முறையே 22.5 லட்சம் டன்களாகவும், 70 லட்சம் டன்களாகவும் மாறும்; அப்போது, ஒவ்வொருவரும் உண்ணும் உணவின் சராசரி கலோரி அளவு 1,800-லிருந்து 2,250 ஆக உயரும்.

மொத்தமாக உணவுப் பொருட்கள், தோட்டக்கலை, பால்பண்ணைகள் ஆகிய பலவகைப்பட்ட அத்தியாவசியத்தேவைப் பொருட்களை அபிவிருத்தி செய்ய ரூ. 20 கோடிக்கு மேல் இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

பருத்தியில் அபிவிருத்தி

இரண்டாவது திட்டத்தில் பருத்தி உற்பத்தியின் இலட்சிய அளவை, ஆண்டொன்றுக்கு 97,000 லட்சம் கெஜ துணி கிடைக்கச் செய்யும்வகையில் 55 லட்சம் பேல்களாக உயர்த்த வழிவகை செய்யப்பட்டிருக்கிறது இந்தப் பருத்தி உற்பத்தித் திட்டச் செலவுக்கு ரூ. 3 2 கோடி ஆகலாமென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும், நல்ல 'தரத்'தைச் சேர்ந்த 50 லட்சம் பேல் சணல் உற்பத்திக்கும் உத்தேசமிட்டுள்ளதாகவும், தெரிகிறது.

இதுபோலவே, வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதாம். புகையிலை சாகுபடி அபிவிருத்தி, பாக்கு உற்பத்தி சம்மந்தப்பட்ட திட்டங்கள், மிளகு, முந்திரி பருப்பு உற்பத்தி ஆகியவற்றின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முறையே ரூ. 16 லட்சம், 36 லட்சம், 51 லட்சம், 18 லட்சம் செலவிடப்படுமாம்.

ஆஸ்திரேலியாவில் ஆயுத சேகரிப்புச்சாலை

ரூ.23 கோடியில் கட்டப்படுமாம்

சிட்னி நகரத்திற்கருகில் ஆயுத சேகரிப்புச்சாலை ஒன்றை 230 லட்சம் ஆஸ்திரேலியப் பவுன் (அதாவது சுமார் ரூ. 23 கோடி) செலவில் கட்டுவதென ஆஸ்திரேலிய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

"உலகத்தின் இப்பகுதியில் ஆக்கிரமிப்பை எதிர்த்து பாதுகாக்கும் பொறுப்பில், தன் பங்கை ஏற்க ஆஸ்திரேலியா திடமாக முடிவு செய்திருக்கிறது" என்று, ஆஸ்திரேலியப் பிரதமர் இராபர்ட் மென்ஜிஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்று கட்டங்களில், ரூ. 7.6,69,00,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சம்பல் நதி தீரத் திட்டம் பூர்த்தியாகும்போது அத்திட்டத்தின் மூலம் 2,04,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். அதே திட்டத்தின் மூலம், ராஜஸ்தானிலும் மத்திய பாரத்திலும் 14 லட்சம் ஏக்கரா நிலத்துக்கு பாசன வசதி கிட்டும்.

உங்கள் குறிப்புக்கு!

கல்கத்தாவில் தானே இயங்கும் டெலிபோன் வசதி

9 மாடி மாளிகை! ரூ. 14 கோடி செலவு!

கல்கத்தாவில் தானே இயங்கும் புதிய 'சிடி,' 'பாங்கு' டெலிபோன் எக்சேஞ்சு பிரதேசங்களில், பூமிக்குள் செல்லும் டெலிபோன் கேபிள் கம்பிகளின் மொத்த நீளம் 32,000 மைல்—அதாவது, பூமத்திய ரேகை இருக்குமிடத்தில் பூமியின் சுற்றளவு எவ்வளவு இருக்குமோ, அதைவிட 7,000 மைல் அதிகமாகும்.

கல்கத்தா டெலிபோன்களைத் தானே இயங்கும் சாதனங்களாக்குவதற்குரிய திட்டத்துக்காகும் மொத்தச் செலவு 14 கோடி ரூபாய்.

'சிடி,' 'பாங்கு' எக்சேஞ்சுகளில், கையால் இயக்கப்படும் 6,252 நேரிடை 'லைன்'கள் தானே இயங்கும் 'லைன்'களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

172 அடி உயரமுள்ள 'டெலிபோன் பவனை'க் கட்டுவதற்கு 14,440 டன் எஃகு உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

'டெலிபோன் பவனி'லுள்ள ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட 'சுவிட்சு' சாதனத்தில், மொத்தம் 8,000 மைல் நீளமுள்ள 'கண்டக்டர்' கம்பிகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

'சிடி,' 'பாங்கு' எக்சேஞ்சுகள் உள்ள 9 மாடி மாளிகையான 'டெலிபோன் பவனி'ல் 350 அறைகளும், 1,000 ஜன்னல்களும், 600 கதவுகளும் உள்ளன.

கிராமக் கைத்தொழில்

அபிவிருத்திக்கு நிதி உதவி

கதர், கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் மேற்கொண்டு மான்யத் தொகைகளும், கடன் பணமும் வழங்கியிருக்கின்றனர்.

கைக்குத்தல் அரிசித் தொழிலின் வளர்ச்சிக்காக இந்த போர்டுக்கு மான்யமாக ரூ. 10,63,800ம், கடன்தொகையாக ரூ. 10,50,000-மும் அளிக்கப்பட்டிருக்கிறது.

கிராமக் கைத்தொழில்களின் தீவிர அபிவிருத்திக்கான ஒருங்குபடுத்தப்பட்ட திட்ட நிறைவேற்றத்துக்காகப் போர்டுக்கு மான்யத் தொகையாக ரூ. 4,80,000-மும், கடன் பணமாக 3 லட்ச ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது; மான்யத் தொகையில் ரூ. 2,80,000 வெல்லம், பழுப்பு சர்க்கரை, மட்பாண்டம், தச்சு வேலை, கருமான் வேலை, மூங்கில் சாமான்கள், நார் தொழில் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ள 20 தீவிர உற்பத்தி நிலையங்களுக்கு சகாயத் தொகையாக வழங்கப்படும். இந்த நிலையங்களுக்கு வெல்லம், பழுப்பு சர்க்கரை உற்பத்திக்காக மேலும் செலவிடுவதற்காக கடனாக ரூ. 2 லட்சம் கொடுக்கப்படும்; பாக்கியுள்ள மான்யத் தொகை ரூ. 2 லட்சமும், கடன் தொகை ரூ. 1 லட்சமும் இந்நிலையங்களுக்குத் தேவைப்படும் கிடங்குகள் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும்.

விவசாய பொருள்கள் விலை வீழ்ச்சி

தடுப்பதில் மத்திய பாரத் சர்க்கார் தீவிரம்

கோதுமையின் விலை வீழ்ச்சியைத் தடுக்கும் நோக்குடன் மணங்கு ரூ. 10 வீதம் சுமார் ரூ. 20 லட்சம் பெற்மானமுள்ள கோதுமையை மத்திய பிரதேச சர்க்கார் வாங்கியுள்ளது.

மத்திய அரசாங்கத்தின் சார்பில் மாநில சர்க்கார் 15 கோதுமை வாங்கும் நிலையங்களைத் திறந்துள்ளதாயும், வாங்கப்பட்ட கோதுமை மத்திய சர்க்கார் முடிவுப்படி செலவு செய்யப்படும் என்றும் தெரியவருகிறது.

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகம்

நிறைவேறிய தீர்மானங்கள்

15—5—55 பிற்பகல் 4 மணியளவில், கமுதியில், மாவட்டச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதிக்காக, மாவட்டத்திலிருந்து கொடுக்கவேண்டிய தொகையை, மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளையிடமிருந்தும் தகுதிக்கேற்ப ரூ. 50-க்குக் குறையாமலும், ரூ. 200 வரையிலும் வசூலித்துத் தருவதென்றும், மாவட்டக் கழக அலுவலகம் கமுதியில் இயங்கிவர வேண்டுமென்றும், மாவட்டத்தில் கிளைக் கழகங்கள் இல்லாத ஊர்களில் புதிதாகக் கழகங்கள் துவக்கப்படுமேயானல், அக்கிளைகளுக்காக முதல் ஆறு மாத 'நம் நாடு' இதழ் சந்தாத் தொகையை மாவட்டக் கிளையின் பொறுப்பிலிருந்து செலுத்தவும், கிளைக் கழகங்கள் அதிகமாகத் துவங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதெனவும், மாவட்ட கழகத்தின் நிதிகளை விருதுநகர் இந்தியன் பாங்கியில், மாவட்டக் கழகத்தின் பெயரில் கணக்கு வைத்துக்கொள்வதென்றும், பாங்கியிலிருந்து மாவட்டக் கழகச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன், பொருளாளர் தோழர் வ. பெ வடிவேல் ஆகிய இருவரும் இணைந்து பணம் வாங்குவதற்கு அவர்களுக்கு அதிகாரமளித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இருக்கும் பிளவுகளை இரட்டிப்பாக்கவா?

பாட்டியாலா, மே 16—

"மாநிலத்தில் உள்ள மந்திரி சபையினரும், துணை மந்திரிகள் உட்பட மாநில காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவினரும் பிரதி மாதமும் முதல் வாரத்தில் காங்கிரஸ் அரசாங்கம், காங்கிரஸ் கட்சி ஆகிய இரு பிரிவுகளும் ஒத்துழைக்க வேண்டுமென்பதற்காக ஒன்றுகக் கூடி முக்கியமான பிரச்சினைகள் பற்றி விவாதம் நடத்தவேண்டும்," என்று, அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு, அண்மையில் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாக இங்குள்ள காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து தெரியவருகிறது.

காங்கிரஸ் கட்சிக்கும், காங்கிரஸ் அரசாங்கத்திற்கும் உள்ள உறவு முறைப் பிரச்சினையை ஒட்டி இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

தொழில் உற்பத்தி பெருக!

ரஷ்யாவில் மாநாடு

ரஷ்யத் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழி முறைகளை ஆராய்வதற்காக அகில ரஷ்யத் தொழிலாளர் மாநாடொன்றை ரஷ்யப் பிரதமர் புல்கானின் மாஸ்கோவில் ஆரம்பித்து வைத்திருக்கிறார். இந்த மாநாடு சோவியத் ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழுவினரால் கூட்டப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

1½ - லட்சம் மரவகைகள் வெள்ளத்தில் சிக்கின!

ஜம்மு, மே. 15—

சீனப் நதிக்கரையில், ஆங்காங்கே அடுக்கப்பட்டு வைத்திருந்த சுமார் 1½ லட்சத்திற்கும் அதிகமான மரவகைகள் பெரு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டனவாம்.

இந்த மரங்கள் அனைத்தும் தனிப்பட்ட கம்பெனிகளுக்குச் சொந்தமானவை என்றும், அவை யாவும் பாகிஸ்தானுக்குள் சென்று விட்டன என்றும் கூறப்படுகிறது.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகம்

நிறைவேறிய தீர்மானங்கள்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் பூந்தமல்லி கண்டோன்மெண்ட், குமணன்சாவடி செட்டித் தெருவில், 15-5-55 காலை 11½-மணிக்கு, செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் நடைபெற்றபோது, மாநில மாநாட்டு நிதிக்காக, செங்கற்பட்டு: ரூ. 100; திருவள்ளூர்: ரூ. 25; மாங்காடு: ரூ. 25; கீழ்பட்டப்பை: ரூ. 10; திருமழிசை: ரூ. 15; பூந்தமல்லி கண்டோன்மெண்ட்: ரூ. 25; கும்மிடிபூண்டி: ரூ. 15; பல்லாவரம்: ரூ. 10; வாலாஜாபாத்: ரூ. 10; ஆவடி: ரூ. 20; பூந்தமல்லி: ரூ. 15; பால்செட்டி: ரூ.15; மதுராந்தகம்: ரூ. 10; மதுராந்தகம்: ரூ. 100; உமையாபரணச்சேரி: ரூ. 15; தண்டரை: ரூ. 15; காஞ்சிபுரம்: ரூ. 150; வேலூர்: ரூ. 10; ஒரக்காட்டுபேட்டை: ரூ. 5—தருவதென வாக்களிக்கப்பட்டது.

பின்னர், ஒவ்வொரு கிளைக் கழகமும் சுற்றுப்புற கிராமங்களுக்குச் சென்று மாதமிருமுறை கழகக் கொள்கைகளைப் பரப்பி பிரச்சார கூட்டங்கள் நடத்த வேண்டும் என்றும், ஆவடியிலிருந்து தோழர் எ. ராமன் அவர்களை மாவட்டப் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டும், செங்கற்பட்டு மாவட்டக் கழகத்தில் சேரவேண்டிய கிளைக் கழகங்களாக உள்ள திருவொற்றியூர், புழல், மூலக்கடை, மாதவரம், செங்குன்றம், ஆலந்தூர் ஆகிய ஊர்களின் கிளைக் கழகங்கள் சென்னை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருப்பதை உடனடியாக நீக்கி, செங்கற்பட்டு மாவட்டத்தில் இணைப்பதுடன் மேற்கொண்டும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக் கழகங்களை வேறு மாவட்டத்தோடு இணைக்காமலிருக்க வேண்டும் என்றும் தலைமை நிலையத்தைக் கேட்டுக்கொண்டும், மாவட்டச் செயலாளர் இரண்டு மாதங்களுக்கொரு முறை மாவட்டச் சுற்றுப் பிரயாணம் செய்து கிளைக் கழகங்களைக் கண்காணிக்க வேண்டும் என்றும், மாவட்ட செயலாளருக்கு ஏற்படுகிற போக்குவரவு செலவை அந்தந்த கிளைக் கழகங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில், மேற்படி கூட்டம் சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடு செய்த பூந்தமல்லி தோழர் இராசரத்தினம் அவர்கட்கும், மற்றும் அவருடன் பணியாற்றிய கழகத் தோழர்கட்கும் தலைவர் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

அறிவிப்பு

'நம் நாடு' தின இதழில் வெளியிடும் செய்திகளை ஆசிரியர் முகவரிக்கும், 'நம் நாடு' இதழுக்கு நன்கொடை, ஏஜண்டு டிபாசிட் தொகை-பில் பாக்கித் தொகை, சந்தாவுக்காக அனுப்பப்படும் செக், ட்ராப்டு, போஸ்டல் ஆர்டர், மணியார்டர் ஆகியவைகளை "பொறுப்பாளர் (மானேஜர்), 'நம் நாடு'" என்ற முகவரிக்கும் எழுதி அனுப்ப வேண்டுகின்றோம். தனிப்பட்டவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு செக், ட்ராப்டு, மணியார்டர் ஆகியவைகளை அனுப்பாதிருக்க வேண்டுகின்றோம்.

தி. மு. க. தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் கடிதங்கள், மணியார்டர் முதலியவைகளை பொதுச்செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

'நம் நாடு,'
பொறுப்பாளர்

காஷ்மீரின் எதிர்காலம்....

பாகிஸ்தான் பிரதமர் கருத்து

புதுடில்லி, மே 17—

"காஷ்மீரின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதற்கு, ஜம்மு-காஷ்மீர் பகுதிகளின் கருத்தை வாக்கெடுப்பு மூலமோ அன்றி வேறெந்த வகையாலோ அறிந்தாகவேண்டும் என்ற கொள்கையில், இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் உறுதியுடனிருக்கின்றன," என்று பாக். பிரதமர் முகம்மது அலி தெரிவித்திருக்கிறார்.

"காஷ்மீர் இந்தியாவுடன்தான் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிற அரசியல் நிர்ணய சபை, குறிப்பிட்ட அளவு பிரதிநிதித்துவத்தால், 'குறிப்பிட்ட அளவு காரியத்'திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டதாகும்; வாக்கெடுப்போ, அல்லது தேர்தலோ, அன்றி வேறெதுவோ — எதுவாயிருப்பினும், ஏதாவது ஒரு முறையின் மூலம் அந்தப் பகுதி மக்களின் கருத்து அறியப்பட்டாக வேண்டும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

★

கூட்டறிக்கை

புதுடில்லி, மே 18—

பாகிஸ்தான் - இந்தியா ஆகிய இரு நாட்டுப் பிரதமர்களும் சந்தித்து உரையாடியது பற்றிய கூட்டு அறிக்கை ஒன்று இன்று வெளியிடப்படலாம்.

கழகக் கூட்டங்கள்

★

கவுந்தப்பாடி

பெரியார் மைதானத்தில்

20—5—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்:

எஸ். எம். சுப்பிரமணியம்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

திருச்செங்கோடு

40 கால் மண்டபத்தில்

20—5—55 வெள்ளி மாலை

பேசுவோர்:

கண்ணதாசன்

கோவை செழியன்

மே தின விழா

20—5—55 மாலை 7 மணிக்கு, பழனி, தேரடி மைதானத்தில், இளைஞர் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும். தோழியர் அருண்மொழி, தோழர் என். முத்து ஆகியோர் பேசுவர்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சென்னை அறிவியக்க மன்ற பொதுக்கூட்டத்தில் பேசுவார்

★

20—5—55 மாலை **6** மணிக்கு, சென்னை — அமைந்தகரை, வெள்ளாளத் தெருவில் (இலக்குமி தியேட்டர் எதிரில்) தோழர் வி. இளஞ்சேரலாதன் தலைமையில் மேற்படி மன்றச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னையில் அரிசி உற்பத்தி

சென்னை மாநிலத்தில் மொத்தம் சாகுபடி செய்யப்பட்டுள்ள 64,25,000 ஏகர் நிலத்தில் 30,96,000 டன் அரிசி உற்பத்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுவதாக, சர்க்காரின் புள்ளி விவர இலாகா கூறுகிறது.

எக்கை ஊடுருவிப் பார்க்கும்

அணுசக்தி கருவி!

ஏழு அங்குல கனமுள்ள எஃகை ஊடுருவிப் பார்க்கக்கூடிய ஒரு புதிய அணுசக்தி கருவியை அமெரிக்க விஞ்ஞானிகளும், எஞ்சினீயர்களும் கண்டுபிடித்திருக்கின்றனராம். அதற்கு 'ஐசோகோப்' எனப் பெயரிடப்பட்டுள்ளதாம்!

மதுரை மாவட்ட கிளைக் கழகங்களுக்கு

"மாநில மாநாட்டுக்கு மதுரை மாவட்டத்தின் சார்பில் கொடுக்க வேண்டிய ரூ. **2,000**-க்கு ஒவ்வொரு கிளைக் கழகமும் மாநாட்டிற்காகவும், மாவட்டக் கழக அலுவல்களுக்காகவும் ரூ. **20** கொடுப்பதென்றும், முனிசிபல் நகரங்கள் ரூ. **100**-க்குக் குறையாமல் கொடுப்பதென்றும், **8—5—55**-ல் திருப்பரங்குன்றத்தில் கூடிய மாவட்டச் செயற் குழுக் கூட்டத்தில் தீர்மானித்தபடி, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புவதோடு, இம்மாத இறுதிக்குள் நம்முடைய கோட்டாவை தலைமை கழகத்திற்கு கொடுக்கவேண்டுமென்பதை தோழர்கள் நினைவில் வைத்து உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன்,"

என, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:—எஸ். முத்து, செயலாளர், மதுரை மாவட்ட தி. மு. கழகம், 4, கட்டுபாளையம், மதுரை.

மதுரை நகர் கிளைக் கழகத் தோழர்கட்கு

"மதுரை நகர் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் 1—5—55-ல் கூடி தீர்மானித்தபடி, மாநில மாநாட்டிற்குத் தங்கள் கிளைக் கழகத்தின் சார்பில் கொடுக்க வேண்டிய ரூ. 25-ல், பொதுச்செயலாளர் அவர்கள் வந்தபோது கொடுத்த கிளைக் கழகங்கள் தவிர, பாக்கி இருக்கிற கிளைக் கழகங்களும், கொடுத்தவர்களில் பாக்கி வைத்திருப்பவர்களும் உடனடியாக கொடுக்க வேண்டுகிறேன்,"

என, மதுரை நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் பி. கே. சேதுராமன் கோருகிறார்.

தணிக்கையை கடுமையாக்க வேண்டுமாம்!

புதுடில்லி, மே. 17—

"ஆபாச சினிமாப் படங்களைத் தடுக்கவும், பொதுமக்களிடையே ஒழுக்கமின்மையை ஒடுக்கவும், சினிமா பட தணிக்கை சம்பந்தமான விதி முறைகள் கடுமையாக அமுல் செய்யப்பட வேண்டும்," என்று காங்கிரஸ் செயற்குழு தெரிவித்துள்ளதாம்.

'ஜனநாயக ஆட்சி அமைக்கவும்!'

நேபாள மன்னரிடம் வற்புறுத்தல்

காட்மண்டு, மே. 16—

ஒரே கட்சி அல்லது கூட்டு முறையில் ஒரு ஜனநாயக ஆட்சி அமைவதையே தாம் விரும்புவதாக தேவகோட்டா என்பவர், நேபாள மன்னரிடம், சுமார் 25 - சமூக இயக்கங்களின் சார்பில் தந்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாக விளக்கம் தந்திருக்கிறார்.

"இம்மாதிரி ஜனநாயக ரீதியில் மந்திரி சபை ஒன்று அமைவது இயலாது போனால், மன்னர், திறம் வாய்ந்த கண்ணியமான தனிப்பட்டோரைக் கொண்டு ஒரு மந்திரி சபை அமைக்கலாம்," என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

கடந்த நான்கு ஆண்டுகளில், நடைமுறையில் இருந்த ஜனநாயக சர்க்காரை நாட்டின் பல அரசியல் கட்சிகளும் நாசவிஷயம்போல் கண்டித்து விமர்சித்து வந்திருப்பதாகவும், அதனைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தேவகோட்டா கூறியுள்ளார்.

சென்னை நகர சபைக்கு சர்க்கார் கடன்

புதியதாக நகர எல்லைக்குள் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு சில சுகாதார வசதிகளைச் செய்து தருவதற்காக, 1955—56-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சர்க்கார் இரண்டு லட்சம் ரூபாய் கடன் ஒதுக்கியுள்ளனர் என்று தெரிகிறது.

சைதாப்பேட்டை சாக்கடைத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கப் படவில்லை; ஏனெனில், திட்டத்தை சர்க்கார் அங்கீகரிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

ஆப்கன் விட்டுக் கொடுக்கிறது!

சமரச முயற்சி வெற்றி பெறுமா?

"பக்தூன்கள் பற்றிய ஆப்கன் அக்கரை — இலங்கை இந்தியர் பிரச்சினையில் இந்தியாவின் அக்கரையைப் போன்றதாம்!

கராச்சி, மே 17—

'பக்தூனிஸ்தான்' அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இப்போது ஆப்கானிஸ்தான் வற்புறுத்தாது என்ற நிலை உருவாக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பாகிஸ்தான்—ஆப்கானிஸ்தான் நாடுகளிடையே இருந்த தகராறைத் தீர்த்துவைப்பதற்காக சவூதி அரேபிய மன்னர் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கக்கூடும் என்ற நம்பிக்கை அரும்பி வருவதாகவும் கூறப்படுகிறது.

சவூதி அரேபிய தூதுக் குழுவின் தலைவர் முஸைதீன் அப்துல் ரஹிமான் காபூலிலிருந்து கராச்சி வந்துள்ளதாகவும், அவர் மேற்கண்ட தகவல்களைத் தந்துள்ளதாயும் கூறப்படுகிறது.

அவர் கொண்டுவந்துள்ளதாக நம்பப்படும் சமரசத் திட்டமொன்றை பாக். மந்திரி சபைகூடி விவாதிக்குமாம்.

"பாகிஸ்தானில் வசிக்கும் பக்தூன்கள் (பட்டாணியர்கள்) பிரச்சினையில், ஆப்கன் சர்க்கார் கொண்டிருக்கும் அக்கரையானது, இலங்கை, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் பிரச்சினையில் இந்தியா காட்டிவரும் அக்கரையைப் போன்றதாகும்,"

என்று, ஆப்கானிய அயல்நாட்டு இலாகா அதிகாரி ஒருவர் கூறியதாகத் தெரிகிறது.

நுறுக்கெழுத்துப் போட்டிகள்

சென்னை சர்க்கார் கருத்து?

குறுக்கெழுத்துப் போட்டி, மற்றும் இதர பரிசுப் போட்டிகள் பற்றி இயற்றப்படவிருக்கும் சட்டம் குறித்து, இந்திய சர்க்காரிடமிருந்து சென்னை சர்க்காருக்கு தகவல் வந்துள்ளதாகத் தெரிகிறது.

பிரச்சினை பரிசீலனையிலிருப்பதாகவும், சீக்கிரமே சென்னையின் முடிவு மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

போட்டிகளைப் பொறுத்தவரையில், 'பரிசுத் தொகைகளை இவ்வளவுதான்,' என்று நிர்ணயம் செய்து கட்டுப்படுத்திவிடுவது தான் சிறந்தது என்று சென்னை சர்க்கார் கருத்தறிவிக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

★

மத்திய சர்க்கார் நடவடிக்கை

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றை எல்லா சட்டசபைகளும் நிறைவேற்றி அனுப்புமாறு எல்லா மாநில முதன் மந்திரிகளுக்கும் மத்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

அப்போதுதான் மத்திய அரசாங்கம் குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்தும் சட்டமியற்ற முடியுமாம்; ஏனெனில், அது மாநில அரசாங்க சம்பந்தப்பட்ட பிரச்சினையாம்!

மத்திய அரசாங்கம் நிறைவேற்ற உத்தேசித்துள்ள சட்டத்தின் நகல் ஒன்றும் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கையில் குடி உரிமை கோரியவரின் பரிதாப நிலை!

புள்ளி விவரங்கள் கூறுகின்றன

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை சர்க்கார், 438 பேர்களுக்கான 104 மனுதார்களுக்கு குடி உரிமை வழங்க சம்மதித்தனர் என்று தெரிகிறது.

அதே மாதத்தில் 7,492 பேர்களுக்கான 2,418 மனுக்களை நிராகரித்தனர் என்றும் தெரியவந்துள்ளது.

மொத்தம் எட்டு லட்சம் பேர் குடிஉரிமை கோரி மனுச் செய்துள்ளனர். இவர்களில் ஏற்கனவே 1,32,604 பேர்களுக்குக் குடிஉரிமை மறுக்கப்பட்டுவிட்டது. 33,440 பேருக்கு மட்டுமே மார்ச் முடிய குடிஉரிமை வழங்கப் பட்டது.

என்று அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன.

★

மீண்டும் கூடிப் பேச முடிவு

இந்தியா - இலங்கை ஒப்பந்தம் பற்றி ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டையைத் தீர்க்க இந்தியத் தூதுவருடன் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த இலங்கை சர்க்காரின் ஆலோசனைக் குழு முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

உரையாடல் இம்மாத இறுதியில் நடைபெறக்கூடும்.

இலங்கையில் உள்ள இந்தியக் குடிமக்களின் பட்டியல் ஒன்றும், தோட்டத் தொழிலாளருக்குத் தருவதற்காக இந்தியக் குடிஉரிமை மனு நமூனக்களும் தருமாறு இரண்டு வாரங்களுக்குமுன் நடைபெற்ற முதல் உரையாடலின் போது இலங்கை சர்க்கார் கோரியிருந்தனராம்.

"இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கில்லை," என, இந்தியத் தூதுவர் மறுத்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

ரஷ்யாவுடன் வர்த்தகம்

இலங்கை சர்க்கார் அனுமதி

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் - குறிப்பாக சோவியத் ரஷ்யாவுடன், தனிப்பட்டவர்கள் வர்த்தகம் புரிய இலங்கை சர்க்கார் அனுமதி தந்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

முதல் முறையாக கடந்த வாரம் தான், ஒரு சிங்களவருக்கு செக்கோஸ்லாவேக்கியாவுடன் வர்த்தகம் புரிய அனுமதி தரப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதுவரையில் இலங்கையுடன் வர்த்தகம் மேற்கொண்டிருந்த ஒரே கம்யூனிஸ்டு நாடு சீனாதான் என்பது தெரிந்ததே!

6-ஆண்டுத் திட்டம்

இலங்கை தயாரித்துள்ளது

கொழும்பு, மே 17—

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான ஆறு ஆண்டுத் திட்டம் ஒன்றை இலங்கை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இந்த திட்டத்தை நிறைவேற்ற ரூ 210 கோடி செலவாகுமெனக் கூறப்படுகிறது.

கைத் தொழில், விவசாயம் இவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் எல்லோருக்கும் வேலை அளிக்க இந்தத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

கவனிப்பார்களாம்!

"தொழில் அதிபர்கள் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் அல்லது பிரச்சினைகளைத் தனிப்பட்ட முறையிலோ அல்லது நிறுவன ரீதியாகவோ தெரிவித்தால், சர்க்கார் அவற்றை முழு கவனத்துடனும், சிரத்தையுடனும் பரிசீலனை செய்யும்," என்று, மத்திய சர்க்கார் தொழிலாளர் நல இலாகா அமைச்சர் கந்துபாய் தேசாய் கூறியிருக்கிறார்.

தியாகிகளுக்கு நினைவுச்சின்னம்

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் துறந்த வீரத் தியாகிகளின் ஞாபகார்த்தமாக இந்தியாவின் தலைவாசலான பம்பாயில் 125 அடி உயரமுள்ள பிரம்மாண்டமான ஒரு ஸ்தூபி கட்டப்படும் என்று கூறப்படுகிறது.

தியாகிகளுக்கு நிலம்:

ஆந்திரத்தின் முடிவு

"அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்படாத பகுதிகளில், ஆட்சேபனைகள் அல்லது தகராறுகள் இல்லாவிட்டால், அரசியல் தியாகிகளுக்கு நிலங்கள் ஜாரி செய்யலாம்," என்று அறிவித்து ஆந்திர மாநில சர்க்கார் உத்தரவொன்றைப் பிறப்பித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.